## September 15, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. காப்பீட்டுத் துறையில் 100 சதவீதம் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்கும் வகையிலான திருத்த மசோதா வரும் குளிர்கால கூட்டத்தொடரின்போது நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் என நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.
    i. காப்பீட்டுத் துறையில் தற்போது அந்நிய நேரடி முதலீட்டுக் கான (எஃப்டிஐ) வரம்பு 74 சதவீதமாக உள்ள நிலையில், அதை 100 சதவீதமாக உயர்த்தவுள்ளதாக நிகழாண்டு பட்ஜெட் உரையில் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.
    ii. நிதித் துறையில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக இதை அவர் முன்மொழிந்தார். தற்போதுவரை காப்பீட்டுத் துறையில் எஃப்டிஐ மூலம் ரூ.82,000 கோடி ஈர்க்கப்பட்டுள்ளது.
    iii. இந்நிலையில், எஃப்டிஐ-க்கான உச்சவரம்பை 100 சதவீதமாக அதிகரிக்க காப்பீட்டுச் சட்டம், 1938-இல் உள்ள பல்வேறு விதிகளில் திருத்தம் மேற்கொள்ள நிதிய மைச்சகம் முனைப்புக் காட்டி வருகிறது. இத்துடன் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழக சட்டம்,1956 மற்றும் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணைய சட்டம், 1999 ஆகிய சட்டங்களிலும் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.
    iv. '2047-இல் அனைவருக்கும் காப்பீடு' என்ற இலக்கை அடைய இந்தச் சீர்திருத்த நடவடிக்கைகளை நிதியமைச்சகம் அறிவித்துள்ளது.
    v. இந்நிலையில், காப்பீட்டுத் துறைக்கான திருத்த மசோதா வரும் குளிர்கால கூட்டத்தொடரில் அறிமுகப்படுத்தப்படும் என நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.
    vi. இந்தியாவில் தற்போது 25 ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களும் 34 பொதுக் காப்பீட்டு நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன.
    vii. முன்னதாக, காப்பீட்டுத் துறைக்கான எஃப்டிஐ வரம்பு 26 சதவீதத்தில் இருந்து 49 சதவீ தமாக 2015-இல் உயர்த்தப்பட்டது. அதன் பிறகு 49 சதவீதத்தில் இருந்து 74 சதவீதமாக 2021-இல் மத்திய அரசு உயர்த்தியது.
2. மகளிர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் மீனாக்ஷி ஹூடா (48 கிலோ பிரிவில்), ஜாஸ்மின் லம்போரியா (57 கிலோ பிரிவில்) ஆகியோர் தங்கம் வென்று உலக சாம்பியன் பட்டத்தை பெற்று சாதனை படைத்தனர்.
    i. உலக குத்துச்சண்டை சம்மேளனம் சார்பில் இங்கிலாந்தின் லிவர்பூல் நகரில் மகளிர் போட்டிகள் நடைபெற்றன.
3. டோக்கியோவில் நடைபெற்று வரும் உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் சர்வேஷ் அனில் குஷாரே உயரம் தாண்டுதல் இறுதிக்கு தகுதி பெற்றார்.
    i. 30 வயதான குஷாரே குரூப் பி பிரிவில் 2.25 மீ உயரம் தாண்டி இறுதிக்கு தகுதி பெற்றார். இதன்மூலம் உலக சாம்பியன்ஷிப் உயரம் தாண்டுதலில் இறுதிக்கு தகுதி பெற்ற முதல் இந்தியர் என்ற சிறப்பையும் பெற்றார்.
4. ஹிந்தி தினத்தையொட்டி, நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி, 'ஹிந்தி உள்பட அனைத்து இந்திய மொழிகளையும் வளப்படுத்த வேண்டும்' என்று வலியுறுத்தினார்.
    i. கடந்த 1949, செப்டம்பர் 14-ஆம் தேதி அரசியல் நிர்ணய சபையால் நாட்டின் அலுவல்பூர்வ மொழியாக ஹிந்தி ஏற்கப்பட்டது. இதன் நினைவாக, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 14-ஆம் தேதி ஹிந்தி தினம் கொண்டாடப்படுகிறது.
5. ஹிந்தி தினத்தையொட்டி, குஜராத் மாநிலம், காந்திநகரில் 5-ஆவது அகில பாரத

அலுவல்பூர்வ மொழி மாநாட்டை தொடங்கிவைத்தார் மத்திய உள்துறை அமைச்சர்.

6. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எம்.சுந்தர், மணிப்பூர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாக, மத்திய சட்ட அமைச்சகம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது.
    i. உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயது 62 ஆகும். உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயது 65 என்பது குறிப்பிடத்தக்கது.
7. மணிப்பூரில் கடந்த 24 மணி நேரத்தில் கொட்டித் தீர்த்த பலத்த மழையால் பல இடங்களில் நிலச்சரிவுகளும் பெரு வெள்ளமும் ஏற்பட்டுள்ளன. இம்பால் கிழக்கு, இம்பால் மேற்கு மாவட்டங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.
    i. சேனாபதி, கம்ஜோங் மாவட்டங்களில் நிலச்சரிவு நேரிட்டுள்ளது. இம்பால் ஆறு உள்பட பல்வேறு ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
8. முன்னாள் பிரதமர் ஜவாஹர்லால் நேரு, நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பாக வாழ்ந்த மிகப்பெரிய பங்களா ரூ.1,100 கோடிக்கு விற்பனையாகவுள்ளது. அதற்கான சட்டபூர்வ பதிவு நடைமுறைகள் நிறைவடையும் கட்டத்தில் உள்ளன.
    i. தில்லியில் இந்தியா கேட்டை சுற்றியுள்ள மொத்தம் 28 சதுர கிலோமீட்டர் பரப்பளவை இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிரிட்டிஷ் கட்டடக்கலைஞர் எட்வின் லுட்யன்ஸ் வடிவமைத்தார்.
    ii. அதனால் இந்தப் பகுதி அவரது பெயரால் ‘லுட்யன்ஸ் மண்டலம்’ என்றே குறிப்பிடப்படுகிறது. அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் அதிகாரிகளை தங்க வைப்பதற்காக இந்த இடங்கள் வடிவமைக்கப்பட்டன.
9. பெற்றோரை இழந்த குழந்தைகள் தடையின்றி கல்வியைத் தொடர மாதம் ரூ.2,000 உதவித் தொகை வழங்கும் 'அன்புக்கரங்கள்' திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை (செப்.15) தொடங்கி வைக்கிறார்.
    i. தமிழக அரசின் தாயுமானவர் திட்டத்தின் ஒரு பகுதியாக, பெற்றோர் இருவரையும் இழந்த மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்து மற்றொரு பெற்றோரால் பராமரிக்க இயலாத குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாக்கும் வகையில், 'அன்புக்கரங்கள் திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது.
    ii. இந்தத் திட்டத்தின் கீழ், அந்தக் குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப்படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியைத் தொடர, மாதம் ரூ.2,000 உதவித் தொகை வழங்கப்படும். மேலும், பள்ளிப்படிப்பு முடித்த பின்னர் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்க வழிவகை செய்யும்.
10. உலகிலேயே முதல் முறையாக மூங்கிலில் இருந்து எத்தனால் உற்பத்தி செய்யும் அதிநவீன ஆலை, அஸ்ஸாமின் நுமலிகரில் ரூ.5,000 கோடி மதிப்பீட்டில் கட்டமைக்கப்பட்டுள்ளது.
    i. இந்த ஆலையை திறந்துவைத்த பிரதமர், நுமலிகர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ரூ.7,230 கோடி மதிப்பிலான புதிய பிரிவு கட்டுமானத்துக்கும் அடிக்கல் நாட்டினார்.
    ii. பின்னர் பேசிய அவர், 'கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு தேவைக்கு இந்தியா வெளிநாடுகளைச் சார்ந்துள்ளது. இந்த நிலையை மாற்றுவதற்காக, புதைபடிம எரிபொருள் ஆய்வு மற்றும் பசுமை எரிசக்தி உற்பத்தியில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.
    iii. எத்தனால், மிக முக்கிய மாற்று எரிபொருளாகும். தற்சார்பு இந்தியாவுக்கு

எரிசக்தி, செமிகண்டக்டர் ஆகிய இரண்டும் முக்கிய உந்துசக்திகளாக உள்ளன' என்றார்.

iv. கழிவுகளே எஞ்சாத வசதியுடன் கட்டமைக்கப் பட்டுள்ள மூங்கில் அடிப்படையிலான உயிரி-எத் தனால் உற்பத்தி ஆலை, வடகிழக்கு மாநிலங்களில் இருந்து ஆண்டுக்கு 5 லட்சம் டன் மூங்கில்களைப் பயன்படுத்தும்.

v. இந்த ஆலை மூலம் 50,000-க்கும் மேற்பட்டோர் நேரடியாகவும், மறைமுகமாகவும் பலனடைவர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

11. அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சில ஐசி சிப்கள் குறித்து விசாரணை மேற்கொள்ள உள்ளதாக சீனா தெரிவித்துள்ளதது.

i. சீனாவுக்கு அதிநவீன செமிகண்டக்டர்கள் கிடைப்பதற்கு அமெரிக்கா கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அதில் சிப் தயாரிப்பதற்கான கருவிகளை சீனாவுக்கு விற்பனை செய்வதற்கான கட்டுப்பாடும் அடங்கும்.

ii. அமெரிக்காவின் பாதுகாப்பு கருதி இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. ஆனால், சீனாவின் வளர்ச்சியைத் தடுக்கும் அமெரிக்க உத்தியின் ஒரு பகுதியே இந்த நடவடிக்கை என்று சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

iii. இந்நிலையில், அமெரிக்காவின் பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டுக் கொள்கை ஆகியவற்றுக்கு எதிராக செயல்பட்டதாக, கடந்த 23 சீன நிறுவனங்களுக்கு அமெரிக்கா கட்டுப்பாடுகளை விதித்தது. அந்த நிறுவனங்களின் பட்டியலில் சீனாவின் முக்கிய சிப் தயாரிப்பு நிறுவனமான செமிகண்டக்டர் உற்பத்தி சர்வதேச கழகத்துக்கு (எஸ்எம்ஐசி) சிப் தயாரிப்பு கருவிகள் வாங்கிய 2 சீன நிறுவனங்களும் இடம் பெற்றன.

12. ரஷியாவில் உள்ள மிகப்பெரும் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களில் ஒன்றின் மீது ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் ராணுவம் தெரிவித்தது.

i. ரஷியாவின் வடமேற்குப் பகுதியின் லெனின்கிராட் பிராந்தியத்தில் அமைந்துள்ள கிரிஷி கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது ட்ரோன்கள் மூலம் உக்ரைன் தாக்குதல் நடத்தியது. தங்கள் மீது ரஷியா நடத்தும் போருக்கு அந்நாட்டின் கச்சா எண்ணெய் வளங்களே காரணம் எனக் கூறி, அதன் உள்கட்டமைப்புகள் மீது கடந்த சில வாரங்களாக உக்ரைன் நடத்திவரும் தாக்குதலின் தொடர்ச்சியாகவே இந்த நடவடிக்கை பார்க்கப்படுகிறது.

ii. ரஷியாவின் மிகப்பெரும் கச்சா எண்ணெய் நிலையங்களில் ஒன்றான கிரிஷியில் ஒரு நாளைக்கு 3.5 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய் உற்பத்திசெய்யப்படுகிறது. இந்தத் தாக்குதலை உறுதிசெய்த உக்ரைன் ராணுவம் கிரிஷி நிலையத்தில் தீப் பற்றி எரிந்து புகை வெளியான புகைப்படங்களைப் பகிர்ந்தது.